www.Padasalai.Net www.TrbTnpsc.com

**வகுப்பு : 12**

தேர்வு எண் | | | | | | |

# முதல் திருப்புதல் தேர்வு - ஜனவரி - 2024

## பொருளியல்

நேரம் : 3.00 மணி | |மொத்த மதிப்பெண்கள் : 90

பகுதி - அ

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 20X1=20

1. பொதுவான விலையின் தொடர் உயர்வை குறிப்பிடும் கருத்து ------ ஆகும்.
   அ) மொத்த விலை குறியீடு ஆ) வாணிபச்சுழல் இ) பணவீக்கம் ஈ) தேசிய வருவாய்
2. சமத்துவத்தின் தந்தையை கண்டுபிடி
   அ) ஜே.எம். கீன்ஸ் ஆ) கார்ல் மார்க்ஸ் இ) ஆடம்ஸ்மித் ஈ) சாமுவேல்சன்
3. எத்தனை முறைகளால் தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது?
   அ) இரண்டு ஆ) மூன்று இ) ஐந்து ஈ) நான்கு
4. GNP = --------- + வெளிநாட்டிலிருந்து வரும் நிகர காரணி வருமானம்.
   அ) NNP ஆ) NDP இ) GDP ஈ) தனிநபர் வருமானம்
5. அமைப்புசார் வேலையின்மையின் இயல்பு ------
   அ) இயங்கா சமுதாயம் ஆ) சமதர்ம சமுதாயம்
   இ) இயங்கும் சமுதாயம் ஈ) கலப்புப் பொருளாதாரம்
6. மொத்த அளிப்பு சமம் ------
   அ) C + I + G ஆ) C + S + G + (X-M)
   இ) C + S + T + (X-M) ஈ) C + S + T + Rf
7. முதலீடு தன்னிச்சையானது என அனுமானிக்கப்பட்டால், AD யின் சாய்வை நிர்ணயிப்பது ---------
   அ) இறுதிநிலை முதலீட்டு நாட்டம் ஆ) செலவிடக்கூடிய வருவாய்
   இ) இறுதிநிலை நுகர்வு நாட்டம் ஈ) சராசரி நுகர்வு நாட்டம்
8. கீன்ஸின் கருத்துப்படி, முதலீடு MEC யும் ------ சார்ந்தது.
   அ) தேவையையும் ஆ) அளிப்பையும் இ) வருவாயையும் ஈ) வட்டி வீதத்தையும்
9. கடன் உருவாக்கம் என்பதன் பொருள்
   அ) கடன் மற்றும் முன்பண பெருக்கம் ஆ) வருவாய்
   இ) செலவு ஈ) சேமிப்பு
10. வங்கி விகிதம் என்பது
    அ) முதல் நிலை பத்திரங்களை மறு தள்ளுபடி செய்வது ஆ) வட்டி விகிதம்
    இ) அந்நிய செலாவணி ஈ) வளர்ச்சி விகிதம்
11. பண மாற்று வீதம் நிர்ணயிக்கும் சந்தை
    அ) பண சந்தை ஆ) அந்நிய செலாவணி இ) பங்கு சந்தை ஈ) மூலதன சந்தை
12. சார்க் உச்சி மாநாடு -------- ஆண்டுகளுக்கொருமுறை நடைபெறுகிறது.
    அ) 2 ஆ) 3 இ) 4 ஈ) 5
13. தூய பொதுப்பொருட்களில், நுகர்ச்சி என்பது ------
    அ) போட்டி உடையது ஆ) போட்டியற்றது இ) இரண்டும் ஈ) மேற்சொன்ன எதுவுமில்லை
14. சூழலியல் என்பது எந்த ஒன்றின் சிறிய பகுதி?
    அ) அடினோஸ்பியர் ஆ) லித்தோஸ்பியர் இ) பையொஸ்பியர் ஈ) மெஸ்சோஸ்பியர்
15. ஆடம்ஸ்மித்தால் கூறப்படாத புனித வரிவிதிப்பு விதி எது?
    அ) சமத்துவம் விதி ஆ) நிச்சயத் தன்மை விதி இ) வசதி விதி ஈ) எளிமை விதி
16. பொருளாதார வளர்ச்சி ------- ஐ அளவிடுகிறது.
    அ) உற்பத்தித் திறன் வளர்ச்சி ஆ) பெயரளவு வருமான அதிகரிப்பு
    இ) உற்பத்தி அதிகரிப்பு ஈ) இவை எதுவுமில்லை
17. கட்டிக்காட்டும் திட்டமிடலை செயல்படுத்திய நாடு
    அ) பிரான்சு ஆ) ஜெர்மனி இ) இந்தியா ஈ) ரஷ்யா
18. இரண்டாம் நிலை விவரங்களுக்கான ஆதாரம் -------
    அ) வெளியிடப்பட்ட விவரங்கள் ஆ) வெளியிடப்படாத விவரங்கள்
    இ) மேற்சொன்ன இரண்டில் ஒன்று ஈ) அ மற்றும் ஆ
19. ஒட்டுறவு என்ற கருத்தினை முதலில் பயன்படுத்தியவர் -------
    அ) நியூட்டன் ஆ) பியர்சன் இ) ஸ்பியர்மென் ஈ) கால்டன்
20. பற்று அட்டை என்பது ------- உதாரணம் ஆகும்.
    அ) கட்டளைப் பணம் ஆ) காகிதப்பணம் இ) நெகிழி பணம் ஈ) கடன் பணம்



CamScanner
Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

பகுதி – ஆ

II. ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்.
வினா எண்.30க்கு கண்டிப்பாக விடையளிக்கவும்.

21. "வருமானத்தின் வட்ட ஓட்டம்" வரையறு.
22. 'விளைவுத் தேவை' என்றால் என்ன?
23. சேமிப்பு நாட்டம் என்றால் என்ன?
24. கடன் விநியோகப் பகிர்வு என்றால் என்ன?
25. பன்னாட்டு வாணிகம் வரைவிலக்கணம் தருக.
26. சிறப்பு எடுப்புரிமைகள் என்பதன் பொருளை எழுதுக.
27. GST யின் கூறுகள் யாவை?
28. உலக வெப்பமயமாதல் என்பதனை வரையறு.
29. புள்ளியியல் என்றால் என்ன?
30. நிதி ஆயோக் பற்றி குறிப்பு வரைக.

பகுதி – இ

III. ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். 7x

வினா எண்.40க்கு கண்டிப்பாக விடையளிக்கவும்.

31. கலப்புப் பொருளாதாரத்தின் முக்கிய இயல்புகளை எடுத்தெழுதுக.
32. தனிநபர் வருமானத்திற்கும் செலவிடக்கூடிய வருமானத்திற்கும் உள்ள வித்தியாசம் என்ன?
33. முடுக்கிக்கும் பெருக்கிக்கும் உள்ள வேறுபாடுகளை விளக்குக.
34. பண மதிப்பு நீக்கத்தின் நோக்கங்களை குறிப்பிடுக.
35. வாணிபக்கொடுப்பல் நிலைக்கும் அயல்நாட்டு செலுத்து நிலைக்குமிடையிலான ஏதேனும் மூன்று வேறுபாடு பட்டியலிடுக.
36. சார்க்கின் பணிகளை சுருக்கமாக கூறுக.
37. நவீன அரசின் பணிகள் யாவை?
38. நீர்மாசுக்கான காரணங்கள் யாவை?
39. பொருளாதார முன்னேற்றத்தை நிர்ணயிக்கும் பொருளாதாரம் சாராத காரணிகள் யாவை?
40. பண அளிப்பினை தீர்மானிக்கும் காரணிகள் யாவை?

பகுதி – ஈ

IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7x

41. (அ) பேரினப் பொருளியலின் பரப்பெல்லையை விவரி.

(அல்லது)

(ஆ) வணிகச் சுழற்சியின் பல்வேறு கட்டங்களை விவரிக்க.

42. (அ) தேசிய வருவாயின் முக்கியத்துவத்தை விவரி.

(அல்லது)

(ஆ) கடன் திரும்பச் செலுத்தும் முறைகளை விளக்குக.

43. (அ) சேயின் அங்காடி விதியினை திறனாய்வு செய்க.

(அல்லது)

(ஆ) திட்டமிடலுக்கு எதிரான வாதங்களை எடுத்துரைக்கவும்.

44. (அ) கீன்ஸின் நுகர்வுச் சார்பின் உளவியல் விதியினை வரைபடம் மூலம் விளக்குக.

(அல்லது)

(ஆ) நீடித்த அல்லது வளம்குன்றா வளர்ச்சி முக்கியத்துவம் மற்றும் அதன் நோக்கங்களை விளக்குக.

45. (அ) இர்விங் ஃபிஷரின் பண அளவுக் கோட்பாட்டினை விளக்குக.

(அல்லது)

(ஆ) ஒப்புமைச் செலவு கோட்பாட்டினை விவரி?

46. (அ) இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகளை விவரிக்க.

(அல்லது)

(ஆ) மறைமுக வரிகளின் நன்மைகள் யாவை?

47. (அ) இந்திய சமூக பொருளாதார மேம்பாட்டில் டபிள்யூ-டி-ஓ-வின் பங்கினை விவரிக்க?

(அல்லது)

(ஆ) பின்வரும் விவரங்களுக்கு கார்ல் பியர்ஸனின் ஒட்டுறவுக் கெழுவினை கண்டறிக.

| விலை (x) | 10 | 12 | 14 | 15 | 19 |
|---|---|---|---|---|---|
| அளிப்பு (y) | 40 | 41 | 48 | 60 | 50 |



CamScanner
Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com